# செய்வதெல்லாம் வாய்க்கும். சங் 1 : 3

**நீங்கள் செய்வது உங்களுக்கு வாய்க்கும்.**

எதைச் செய்தாலும் தோல்வியாக முடிகிறதே என துவழ்ந்து போன சகோதரியே, சகோதரனே!

இந்த மாதத்தில் அத்துடன் இந்த வருடத்தில் **நீ செய்வதெல்லாம் வாய்க்கும்** என மனமாற வாழ்த்துகிறேன்.

**சங்கீதம் 1:3 சொல்கிறது**

**அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்**

**எவன் செய்வதெல்லாம் வாய்க்கும் என்ற ஒரு கேள்வி நமக்குள் எழும்புகிறதல்லவா?**

1. துன்மார்க்கனுடைய ஆலோசனையில் நடவாமலும்
2. பாவிகளுடைய வழியில் நில்லாமலும்
3. பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும்
4. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து
5. இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
6. அவன் நீர்கால்களின் ஓரமாய் நடப்பட்டு
7. தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராயிருக்கிற மரத்தைப் போலிருக்கிறான்.

**"அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்"**

என் அன்பு அன்பு சகோதரனே, சகோதரியே,

மேற்கண்ட வசனங்களை உங்கள் வாழ்க்கையோடு ஒப்பிட்டு பாருங்கள். முதல் மூன்று குறிப்பு படி நடவாமல், நில்லாமல், உட்காரமல் இருக்கிறீர்களா ? 4ம், 5ம் குறிப்பு படி களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் பிரியமும் தியானமும் உள்ளதா ? அப்படியானால் 6ம், 7ம் குறிப்பு படி நீர்கால்கள், கனிகள், இலை போன்ற ஆசீர்வாதம் உங்களைத் தொடரும்.

மிக முக்கியமாக நீங்கள் **செய்வதெல்லாம் வாய்க்கும்"**

**இதே நேரத்தில் ஏசாயா 54 : 17 சொல்கிறது,**

**உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும், எந்த ஆயுதமும்**

**வாய்க்காதேபோம்**–என்பதாக. அநேக வேத பக்தர்களின் காரியங்களை தேவன் வாய்க்கச் செய்தார்.

**ஆதி.21 : 40, 2, நாளா 32 : 30** : எசேக்கியா செய்வதெல்லாம் வாய்த்தது ஆபிரகாமின் வேலைக்காரனின் பிரயாணத்தை கர்த்தர் வாய்க்கச் செய்தார்.

**யோசேப்பு 39 : 23** கர்த்தர் அவனோடிருந்து, அவன் எதைச் செய்தாலும் வாய்க்கப் பண்ணினார்.

**2 நாளா 26 : 5** உசியா கர்த்தரை தேடின நாட்களில் அவன் காரியங்களை தேவன் வாய்க்கச் செய்தார்.

எசேக்கியா செய்ததை வாய்க்கச் செய்த தேவன், ஆபிரகாமின் பிரயாணத்தை வாய்க்க செய்த தேவன், யோசேப்போடே இருந்து, எதைச் செய்தாலும் வாய்க்க செய்த தேவன், உசியா கர்த்தரை தேடின நாட்களில் அவன் காரியங்களை வாய்க்கச் செய்த தேவன்

**உன் காரியங்களை வாய்க்க செய்வது எத்தனை நிச்சயம்.**

**இதே, நேரத்தில் உனக்கு விரோதமாக எழும்பும் ஆயுதமும் வாய்க்காதே போம் – என்பதும் நிச்சயம்.**

**பக்தன் பாடுகிறான்.**

உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம் வாய்த்திடாதே என்றதாலே ஸ்தோத்திரம்
பறந்திடுமே உம் நாமத்திலே, பரனே எனக்காய் ஜெயக் கொடியே!
என்னை மறவா இயேசு நாதா உந்தன் தயவால் என்னை நடத்தும்

இந்த மாதம் அடிக்கடி இந்தப் பாடலைப் பாடுங்கள்.

இதே நேரத்தில் செய்வதெல்லாம் வாய்க்கும் என்ற வார்த்தைக்காக தேவனைத் துதியுங்கள்.

**1கொரி.10 : 31** நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்

**கொலோ 3 : 17** வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்.

அப்பொழுது **நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும்**– ஆமென்.